**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்.**

**முன்னிலை : திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்**

2026–ம் ஆண்டு மார்ச் மாதம் 09 ஆம் நாள் திங்கட்கிழமை
திருவள்ளுவராண்டு 2057, ஸ்ரீவிசுவாவசு வருடம், மாசித்திங்கள் 25 ம் நாள்

**அசல் வழக்கு எண். 99/2021**

**CNR No.TNTI14-000135-2021**

1. கண்ணம்மாள்
2. சுமதி
3. ராகவி
4. மைனர் பிரவீன் (மைனருக்கு கார்டியன்
தாயார் 2 ம் வாதி சுமதி மூலமாக)
5. வசந்தி
6. பிரபு
7. தினேஷ்
8. செல்வி
9. ராஜேஸ்வரி
10. சக்திவேல்
11. ரஞ்சிதா
12. கோவிந்தராஜ்
13. செல்வி
14. கண்ணம்மாள்
15. பிரபாகரன்
16. பாபு
17. சங்கீதா
18. பார்வதி
19. வீரம்மாள் ... வாதிகள்

/எதிர்/

1. கோவிந்தம்மாள் (இறந்துவிட்டார்)
2. பார்வதி

3. M.குமாரசாமி
4. கனரா வங்கி, காங்கயம் கிளை
அதன் சார்பாக கிளை மேலாளர் (Exonerated)
(Amended as per order in I.A.474(a)/2022 Dated : 11.08.2022)
(Amended as per order in I.A.2/2024 Dated : 28.10.2024)

... பிரதிவாதிகள்

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் முன்பாக 04.03.2026 ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது, வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.E.S.ரஞ்சித், B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.செல்வக்குமார், B.A.,B.L., அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு சாட்சிய, சான்றாவணங்கள் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் சீரிய பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்..

## தீர்ப்புரை

தாவா சொத்து வாதிகளுக்கு தனிமையில் பாத்தியப்பட்டு அனுபவித்து வருவதில் 1, 2 பிரதிவாதிகள் கடந்த 30.07.2010 ம் தேதியில் காங்கயம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.10015/2010 ன்படி 3 ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ள பாகபாத்திய விடுதலை ஆவணமானது தாவா சொத்தான காங்கயம் வட்டம், காங்கயம் கிராமம், ரீசர்வே எண்.908/2 (பழைய க.ச.974) பூமியை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தக் கூடியதல்ல என்று விளம்புகை செய்யும்படிக்கும், தாவா செலவுத்தொகை வாதிகளுக்கு பிரதிவாதிகளால் கிடைக்கும்படிக்கும், வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1) வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம்:–**

i) தாவா சொத்துக்கள் சின்னா போயன் மகன் சேமலைபோயன் என்பவருக்கு காங்கயம் சார்பதிவக ஆவண எண்.878/1958 ன் படி ஏற்பட்ட கிரைய ஆவணத்தின்படி பாத்தியப்பட்டு அவருடைய அனுபோக சுவாதீனத்தில் வைத்து யாருடைய இடையூறும் இல்லாமல் அனுபவித்து வந்து எவ்விதமான ஆவணமும் ஏற்படுத்தி வைக்காமல் கடந்த 09.07.1993 ம் தேதியில் காலமாகிவிட்டார். மேற்படி சேமலை போயனுக்கு முன்பாகவே அவரின் மனைவி கண்ணாத்தாள் கடந்த 10.06.1988 ம் தேதியில் காலமாகிவிட்டார். மேற்படி சேமலை போயன் மக்களான ஆறுமுகம், ராமசாமி, பழனிசாமி, குப்புசாமி மற்றும் 18, 19 வாதிகள் ஆகியோர்கள் வாரிசு முறையில் தாவா சொத்துக்களை பொதுவில் அடைந்து அனுபவித்து வந்தார்கள்.

ii) இந்நிலையில் சேமலை போயன் மகன் ஆறுமுகம் என்பவரும் தாவா சொத்தை பொதுவில் அனுபவித்து வந்து கடந்த 22.07.2019 ம் தேதியில் காலமாகிவிட்டதில் மேற்படி ஆறுமுகம் மகன் சுப்பிரமணி கடந்த 20.08.2007 ம் தேதியில் காலமாகிவிட்டார். மேற்படி ஆறுமுகம் மனைவி 1ம் வாதி மற்றும் சுப்பிரமணியின் வாரிசுகளான 2 முதல் 4 வாதிகளும் பொதுவில் அடைந்து அனுபவித்து வருகிறார்கள். தற்காலம் ஆறுமுகத்தின் வாரிசுகளான தாவா 1 முதல் 4 வாதிகள் தாவா சொத்தில் பொதுவில் பாத்தியம் ஏற்பட்டு பொது சுவாதீனம் அடைந்து பொதுவில் அனுபவித்து வருகிறார்கள்.

iii) மேலும் சேமலைபோயன் மகன் ராமசாமி என்பவரும் தாவா சொத்தை பொதுவில் அனுபவித்து வந்து கடந்த 03.10.1997 ம் தேதியில் காலமாகிவிட்டார். மேற்படியாரின் மனைவி கண்ணம்மாள் வெகுகாலத்திற்கு முன்பாகவே

காலமாகிவிட்டார். மேற்படி ராமசாமியின் மக்களான ஈஸ்வரன், நாச்சியம்மாள், 8 ம் வாதி ஆகியோர் அடைந்து அனுபவித்து வந்ததில், மேற்படி ஈஸ்வரன் கடந்த 24.08.2016 ம் தேதியில் காலமாகிவிட்டார். மேற்படி ஈஸ்வரன் என்பவரின் வாரிசுகள் தான் 5, 6 வாதிகள் ஆவார்கள். நாச்சியம்மாள் கடந்த 11.10.2005 ம் தேதியில் காலமாகிவிட்டார். மேற்படி நாச்சியம்மாளின் வாரிசு 7 ம் வாதி ஆவார். ராமசாமி வாரிசுகளான 5 முதல் 8 வாதிகள் தாவா சொத்தில் பொதுவில் பாத்தியம் ஏற்பட்டு பொது சுவாதீனம் அடைந்து பொதுவில் அனுபவித்து வருகிறார்கள்.

iv) தாவா சேமலைபோயன் மகன் பழனிசாமி என்பவரும் தாவா சொத்தை பொதுவில் அனுபவித்து வந்து கடந்த 23.03.2002 ம் தேதியில் காலமாகிவிட்டார். மேற்படியாரின் மனைவி பழனியம்மாள் கடந்த 23.11.2009 ம் தேதியில் காலமாகிவிட்டார். மேற்படி பழனிசாமி மக்களான ராமசாமி மற்றும் 12, 13 பிரதிவாதிகள் ஆகியோர் அடைந்து அனுபவித்து வந்ததில், மேற்படி ராமசாமி கடந்த 17.12.2018 ம் தேதியில் காலமாகிவிட்டார். மேற்படி ராமசாமியின் வாரிசுகள் தான் 9 முதல் 11 வாதிகள் ஆவார்கள். பழனிசாமியின் வாரிசுகளான 9 முதல் 13 வாதிகள் தாவா சொத்தில் பொதுவில் பாத்தியம் ஏற்பட்டு பொது சுவாதீனம் அடைந்து பொதுவில் அனுபவித்து வருகிறார்கள்.

v) தாவா சேமலைபோயன் மகன் குப்புசாமி என்பவரும் தாவா சொத்தை பொதுவில் அனுபவித்து வந்து கடந்த 23.01.1996 ம் தேதியில் காலமாகிவிட்டார். மேற்படி குப்புசாமியின் மனைவி 14 ம் வாதி, மக்கள் 15 முதல் 17 வாதிகள் ஆவார்கள். தற்காலம் குப்புசாமியின் வாரிசுகளான 14 முதல் 17 வாதிகள் தாவா சொத்தில் பொதுவில் பாத்தியம் ஏற்பட்டு பொது சுவாதீனம் அடைந்து பொதுவில் அனுபவித்து வருகிறார்கள். தாவா சொத்துக்களை மேற்படி வீதம் சேமலை போயரின் தற்கால வாரிசுகளான வாதிகள் வாரிசு முறையில் தாவா

சொத்துக்களை பொதுவில் அடைந்து அனுபவித்து வருவாய்துறை ஆவணமான பட்டாவில் பெயர் மாற்றம் செய்தும் அரசுக்கு செலுத்த வேண்டிய வரி முதலானவைகள் பொதுவில் செலுத்தி அனுபவித்தும் வருகிறார்கள்.

vi) தாவா சொத்துக்களில் மேலும் மேம்பாடுகள் செய்து அனுபவிக்க வேண்டியிருப்பதாலும் தாவா சொத்தை பாகம் செய்து கொள்ள ஏற்பாடு செய்தபோது தாவா சொத்தில் 1 முதல் 4 வாதிகளின் மூதாதையர் சேமலைபோயன் மகன் ஆறுமுகம் என்பவர் பெற்ற கடனுக்காக தாவா சொத்தின் பேரில் இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.324/2005 என்ற வழக்கு தாக்கல் செய்து, அதில் ஜப்தி செய்யப்பட்டுள்ளதை அறிந்து வாரிசுகளான 1 முதல் 4 வாதிகள் அதனை ரத்து செய்ய மனு தாக்கல் செய்து கடந்த 17.02.2021ம் தேதியில் ரத்து உத்தரவு பெற்று அதனை நீதிமன்றம் மூலம் ஜப்தி நீக்கரவும் செய்துள்ளார்கள்.

vii) இந்நிலையில் தாவா சொத்தினை பாகம் செய்து கொள்ள வில்லங்கம் செய்யவும் பரிசீலனை செய்து தாவா சொத்துக்கு வில்லங்கம் பெற்று பார்த்த போது தாவா சொத்துக்கும் சிறிதும் சம்மந்தமில்லாத 1, 2 பிரதிவாதிகள் தங்களுக்குள்ள பாத்தியத்தை 3ம் பிரதிவாதிக்கு கடந்த 30.07.2010ம் தேதியில் ஒரு பாகபாத்திய விடுதலை பத்திரம் காங்கயம் சார்பதிவக ஆவண எண்.10015/2010ல் ஏற்படுத்தப்பட்டு, மேற்படி ஆவணத்தில் தாவா சொத்தையும் சேர்த்து தங்களுக்கு பாத்தியப்பட்டதைபோல் பொய்யாகவும் மோசடியாகவும் உருவாக்கியுள்ளார்கள். அதன் தொடர்ச்சியாக மேற்படி ஆவணத்தின்படி தாவா சொத்துக்கு சிறிதும் சம்மந்தமில்லாத 3ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்ட ஆவணத்தை சரிவர பரிசீலனை செய்யாமல் 4ம் பிரதிவாதியான வங்கியும், 3ம் பிரதிவாதிக்கு கடன் கொடுத்து அதற்கு ஆதரவாக தாவா சொத்தினையும் சேர்த்து

3ம் பிரதிவாதி கடந்த 26.06.2018ம் தேதியில் காங்கயம் சார்பதிவக ஆவண எண். 3043/2018ன் படி அடமான ஆவணமும் ஏற்படுத்தி கொடுத்துள்ளார்.

viii) மேற்படி ஆவணத்தில் வாதிகள் தரப்பினரோ சாட்சியோ அல்ல. எனவே மேற்படி ஆவணங்கள் வாதிகளின் அனுபவ பாத்தியத்தை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தக் கூடியதல்ல என்பதால் வாதிகள் மேற்படி பாகபாத்திய விடுதலை ஆவணத்தையும், அடமான ஆவணத்தையும் இக்னோர் செய்கிறார்கள். 1 முதல் 3 பிரதிவாதிகளின் முன்னோர்களுக்கு தாவா சொத்திற்கு வடபுறம் அமைந்துள்ள ரீ.சர்வே எண்.908/1 காலை பூமியாகும். அதனை பொறுத்து தான் 1 முதல் 3 பிரதிவாதிகளின் முன்னோர்கள் வில்லங்க விற்கிரையம் செய்து அனுபவித்து வந்துள்ளார்கள். 1ம் பிரதிவாதி கடந்த 16.12.2012ம் தேதியில் இறந்துவிட்டார். மேற்படி இறந்துபோன 1ம் பிரதிவாதிக்கு 2, 3 பிரதிவாதிகளை தவிர வேறு வாரிசுதாரர்கள் யாரும் இல்லை.

ix) மேலும் 4ம் பிரதிவாதியாக அசல் வழக்கில் கட்சி சேர்க்கப்பட்டுள்ள சிண்டிகேட் வங்கி, காங்கயம் கிளை ரிசர்வ் வங்கி உத்தரவுப்படி காங்கயம் கிளை, கனரா வங்கியுடன் இணைக்கப்பட்டுள்ளது. தாவா சொத்தின் பேரில் 3, 4 எதிர்மனுதாரர்கள் ஏற்படுத்தியுள்ள கடந்த 20.06.2018ம் தேதி ஆவண எண்.3043/2018ன் படியான அடமான ஆவணம் செல்லதக்கதல்ல என விளம்புகை கோரியிருந்த நிலையில் வழக்கு நிலுவையில் உள்ள போது கடந்த 03.02.2023ம் தேதி ஆவண எண்.912/2023ன் படி மேற்படி அடமான ஆவணத்தை 3, 4 பிரதிவாதிகள் ரத்து செய்துவிட்டார்கள். எனவே தாவாவில் 4ம் பிரதிவாதி மீது கோரியுள்ள 2வது பரிகாரம் வாதிகளுக்கு பூர்த்தியாகிவிட்டதால் மேற்படி 4ம் பிரதிவாதியையும், 2வது பரிகாரத்தை பொறுத்து தாவாவில் நீக்கரவு

செய்ய கோரி கடந்த 21.06.2024 ம் தேதி மெமோ தாக்கல் செய்து உத்தரவு பெறப்பட்டு அதன்படி தாவாவில் திருத்தம் செய்யப்பட்டுள்ளது.

x) இந்நிலையில் தாவா சொத்தின் வில்லங்க விபரத்தில் தாவா சொத்திற்கு சம்மந்தமில்லாத மேற்படி பதிவுகள் தாவா சொத்திற்கான வில்லங்கத்தில் காட்டுவதால் வாதிகள் வேறு வில்லங்கம் ஏற்படுத்த தடை ஏற்படுகிறது. எனவே மேற்படி ஆவணம் தாவா சொத்தையோ, வாதிகளையோ எந்த விதத்திலும் கட்டுப்படுத்த கூடியதல்ல. மேற்படி தாவா சொத்தில் தவறுதலாக பதிவு செய்யப்பட்ட விபரம் தற்போது தான் வாதிகளுக்கு தெரிய வந்தது. அதனால் தாவா சொத்தில் வாதிகளின் உரிமைக்கு பிரச்சனை ஏற்படுவதை கருத்தில் கொண்டு பிரதிவாதிகளை மேற்படி வீதம் தவறாக பதிவான விபரத்தை கூறி மேற்படி பாகபாத்திய விடுதலை ஆவணத்தையும், அடமான ஆவணத்தையும் சட்டத்திற்கு உட்பட்டு பிழை திருத்தமாகவோ அல்லது ரத்து செய்து கொண்டு புதிய ஆவணமாகவோ ஏற்படுத்தி கொள்ளவோ 6 மாதங்களாக கேட்டு வந்து கடந்த 28.06.2021 ம் தேதி கேட்டதில் பிரதிவாதிகள் ஒத்து வரவில்லை. எனவே வாதிகள் கோரியபடி தாவா சொத்தைப் பொறுத்து வாதிகள் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் வழங்கி உத்தரவிட வேண்டும் என்பதே வாதிகள் தரப்பு வழக்குரை சுருக்கமாகும்.

**<u>2) 3 ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டு 2 ம் பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிர்வழக்குரைச் சுருக்கம்:-</u>**

i) வாதிகளின் தாவா பொய், மோசடி, சட்டப்படியும் நியாயப்படியும், ஆவணங்கள் படியும் செல்லத்தக்கதல்ல. இப்பிரதிவாதிகள் இந்த எதிர் வழக்குரையில் வெளிப்படையாக ஒப்புக்கொண்ட சங்கதிகள் தவிர மற்றவைகளை வாதிகளே கண்டிப்பாக ஆவணப்பூர்வமாக நிரூபிக்க வேண்டியது.

ii) தாவா சொத்துக்கள் 3ம் பிரதிவாதியின் குடும்பத்திற்கு பூர்வீக வகையில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் ஆகும். மேற்படி பூமியில் 3ம் பிரதிவாதியின் முன்னோர்கள் கிணர் வெட்டியும், மின் இணைப்பு பெற்றும், ஆழ்துளை கிணர் அமைத்தும் அனுபவித்து வந்தார்கள். இந்நிலையில் 3ம் பிரதிவாதி அவரது சகோதரியான 2ம் பிரதிவாதியிடமும், தாயாரான 1ம் பிரதிவாதியிடமும் கடந்த 30.07.2010ம் தேதியில் தனது குடும்பத்துக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் அனைத்தையும் ஒரு பதிவு செய்யப்பட்ட பாக பாத்திய விடுதலை ஆவணம் மூலம் விடுதலை பெற்று தனித்து பாத்தியமடைந்து அனுபவ சுவாதீனத்தில் இருந்து வருகிறார்.

iii) வாதிகள் தாவா சொத்தில் அனுபவத்தில் இருந்திருந்தால் மேற்படி ஆவண விவரம் அப்பொழுதே வாதிகளுக்கு தெரிந்திருக்கும். மேலும் வாதிகள் தாவா சொத்தில் அனுபவத்தில் இருந்திருந்தால் தாவா சொத்தில் உள்ள நிலையான அம்சங்களை முழுமையாக வழக்குரை சொத்து விபரத்தில் குறிப்பிட்டு தாக்கல் செய்திருப்பார்கள். தாவா சொத்தில் எந்த வீடும் நிலையில் இல்லை. வாதிகளின் வழக்குரை சொத்து விபரமே தவறானது. மேற்படி தாவா சொத்தானது பு.ஹெக்.4.22.00 இதற்கு பு.ஏ.10.42 விஸ்தீரணம் கொண்டது ஆகும். மேற்படி வீதம் தான் 3ம் பிரதிவாதியின் பாகபாத்திய விடுதலை ஆவணத்தில் கண்டுள்ளது.

iv) ஆனால் வாதிகள் தாவா சொத்தில் 3ம் பிரதிவாதிக்கு எந்த தகவலும் தெரிவிக்காமல் 3ம் பிரதிவாதிக்கு வெறும் பு.ஏ.0.08 விஸ்தீரணம் மட்டும் பாத்தியம் போலும், மீதமுள்ள பு.ஏ.10.34 விஸ்தீரண பூமி முழுவதும் வாதிகளுக்கு பாத்தியப்பட்டது போல் அரசு வருவாய்துறை ஆவணங்களை மோசடி செய்து ஏற்படுத்திக்கொண்டு 3ம் பிரதிவாதியை மோசடி செய்யும் நோக்கில் இந்த

வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். தாவா சொத்துக்கள் கடந்த 12 வருடங்களாக வாதிகளுக்கு தெரிந்தும், ஆவணங்களின் படியும் 3ம் பிரதிவாதியின் அனுபவத்திலும், அதற்கு முன்பு பிரதிவாதிகளின் முன்னோர்கள் அனுபவத்திலும் இருந்து வருகிறது. மேற்படி சொத்தில் வாதிகளுக்கு எவ்வித பாத்தியமும் அனுபவமும் உரிமையும் கிடையாது.

v) தாவா சொத்தில் வாதிகளுக்கு எந்தவித அனுபவமும் பாத்தியமும் இல்லாத நிலையில் வாதிகள் இந்த பிரதிவாதியின் ஆவணங்களை பொறுத்தும், தாவா சொத்தை பொறுத்தும் எந்தவித பரிகாரமும் கேட்க உரிமையும் தகுதியும் அற்றவர்கள் ஆவார்கள். வாதிகள் வழக்கில் கோரியுள்ளவாறு எந்தவித வழக்கு மூலமும் ஏற்படவில்லை. வாதிகள் தாவா சொத்தில் 3ம் பிரதிவாதியின் பாத்தியத்தை மோசடி செய்து லாபம் அடையும் நோக்கில் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். எனவே வாதிகளின் வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்பதே 2, 3 பிரதிவாதிகள் தரப்பு எதிர்வழக்குரை சுருக்கமாகும்.

**3) எழுவினாக்கள் :-**

மேற்படி இருதரப்பு வாதுரைகளையும், வழக்குரை மற்றும் எதிர் வழக்குரை மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்து இவ்வழக்கின் தீர்விற்காக கடந்த 04.10.2023 அன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்ட 1 முதல் 4 எழுவினாக்களை வனைந்துள்ளது.

**4. எழுவினாக்கள் 1 முதல் 4 :-**

| | |
|---|---|
| **எழுவினா – 1** | தாவா சொத்துக்கள் வாதிகளுக்கு பாத்தியப்பட்டு வாதிகளின் தனிப்பட்ட உரிமை மற்றும் அனுபவத்தின் கீழ் உள்ளது என்பது சரியா? |

| | |
|---|---|
| **எழுவினா – 2** | வாதிகள் தாவாவில் கோரியபடி 30.07.2010 தேதியிட்ட காங்கயம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.10015/2010 ஆவணம் தாவா சொத்தை கட்டுப்படுத்தாது என்ற விளம்புகை பரிகாரம் கிடைக்கத்தக்கதா? |
| **எழுவினா – 3** | வாதிகளுக்கு தாவாவில் கோரியபடி 26.06.2018 தேதியிட்ட காங்கயம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.3043/2018 அடமான ஆவணம் தாவா சொத்தை கட்டுப்படுத்தக்கூடியதல்ல என்ற விளம்புகை பரிகாரம் கிடைக்கத்தக்கதா? |
| **எழுவினா – 4** | வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரங்கள் என்ன? |

5. இவ்வழக்கில் வாதிகள் தரப்பில் 12ம் வாதி கோவிந்தராஜ் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.37 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. வாதிகள் தரப்பு சாட்சியாக இளங்கோ என்பவர் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் 3ம் பிரதிவாதி குமாரசாமி என்பவர் பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 2, 3 பிரதிவாதிகள் தரப்பு சாட்சியாக செல்வராஜ் என்பவர் பி.வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார்.

6. வழக்காவணங்களின் பரிசீலனையில் இருந்து வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் கடந்த 03.02.2023ம் தேதியில் ஆவண எண்.912/2023ன் படி ஆவண எண்.3043/2018 ஆன அடமான ஆவணத்தை 3, 4 பிரதிவாதிகள் ரத்து செய்து விட்டதால் தாவாவில் 4ம் பிரதிவாதி மீது கோரியுள்ள 2வது பரிகாரம் வாதிகளுக்கு பூர்த்தியாகிவிட்டதால் மேற்படி 4ம் பிரதிவாதியையும் மற்றும் தாவா 2வது பரிகாரத்தையும் வழக்குரையில் இருந்து நீக்கரவு

செய்யக்கோரி கடந்த 21.06.2024 ம் தேதியன்று வாதிகள் தரப்பில் குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டு இ.ம.எண்.2/2024 மனுவில் 28.10.2024 தேதியிட்ட உத்தரவுப்படி 4 ம் பிரதிவாதி மற்றும் வழக்குரை தாவா 2 வது பரிகாரம் ஆகியவை அசல் வழக்கில் இருந்து நீக்கறவு செய்யப்பட்டு அசல் வழக்கு திருத்தம் செய்யப்பட்டுள்ளது. எனவே இந்நீதிமன்றத்தால் வனையப்பட்ட எழுவினா எண்.3 ஐ பொறுத்து வாதிகள் வழக்குரையில் கோரியுள்ள பரிகாரம் வாதிகளால் கைவிடப்பட்டு அசல் வழக்குரை திருத்தம் செய்யப்பட்டுள்ளதால் கடந்த 04.10.2023 அன்று இவ்வழக்கில் வனையப்பட்ட எழுவினா எண்.3 ஐ பொறுத்து தீர்வு காண வேண்டிய அவசியம் இல்லை என்பதால் மேற்படி எழுவினா எண்.3 ஐ இந்நீதிமன்றம் உரிமையியல் விசாரணை நடைமுறை சட்டம் கட்டளை 14 விதி 5 ன் கீழ் நீக்கம் செய்து உத்தரவிடுகிறது.

7. வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் தாவா சொத்துக்கள் சின்னாபோயன் மகன் சேமலைபோயன் என்பவருக்கு காங்கயம் சார்பதிவக ஆவண எண்.878/1958 ன் படி ஏற்பட்ட கிரைய ஆவணத்தின்படி பாத்தியப்பட்டு அனுபவித்து வந்து எவ்விதமான ஆவணமும் ஏற்படுத்தி வைக்காமல் கடந்த 09.07.1993 ம் தேதியில் இறந்துவிட்டதற்கு பின்னிட்டு சேமலை போயரின் தற்கால வாரிசுகளான வாதிகள் தாவா சொத்தை பொதுவில் அனுபவித்து வருகிறார்கள் என்றும் தாவா சொத்தில் 1 முதல் 4 வாதிகளின் மூதாதையர் சேமலைபோயன் மகன் ஆறுமுகம் என்பவர் பெற்ற கடனுக்காக தாவா சொத்தின் பேரில் இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.324/2005 என்ற வழக்கு தாக்கல் செய்து, அதில் ஜப்தி செய்யப்பட்டுள்ளதை அறிந்து வாரிசுகளான 1 முதல் 4 வாதிகள் அதனை ரத்து செய்ய மனு தாக்கல் செய்து கடந்த 17.02.2021 ம் தேதியில் ரத்து உத்தரவு பெற்று அதனை நீதிமன்றம் மூலம் ஜப்தி

நீக்கரவும் செய்துள்ளார்கள் என்றும் இந்நிலையில் தாவா சொத்துக்கும் சிறிதும் சம்மந்தமில்லாத 1, 2 பிரதிவாதிகள் தங்களுக்குள்ள பாத்தியத்தை 3ம் பிரதிவாதிக்கு கடந்த 30.07.2010ம் தேதியில் ஒரு பாகபாத்திய விடுதலை ஆவணத்தை தாவா சொத்தையும் சேர்த்து தங்களுக்கு பாத்தியப்பட்டதைபோல் மோசடியாக உருவாக்கியுள்ளார்கள் என்றும் தாவா சொத்தின் பேரில் 3, 4 எதிர்மனுதாரர்கள் ஏற்படுத்தியுள்ள கடந்த 20.06.2018ம் தேதிய அடமான ஆவணத்தை கடந்த 03.02.2023ம் தேதியில் 3, 4 பிரதிவாதிகள் ரத்து செய்துவிட்டார்கள் என்றும் எனவே தாவாவில் 4ம் பிரதிவாதி இவ்வழக்கில் இருந்து நீக்கறவு செய்யப்பட்டுள்ளார் என்றும் மேற்படி ஆவணங்களை ரத்து செய்து கொடுக்க வாதிகள் கடந்த 28.06.2021ம் தேதி கேட்டதில் பிரதிவாதிகள் ஒத்து வரவில்லை என்றும் எனவே தாவா சொத்தைப் பொறுத்து வாதிகள் கோரியுள்ளபடி விளம்புகை பரிகாரம் வழங்கி உத்தரவிட வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

8. 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில் தாவா சொத்துக்கள் 3ம் பிரதிவாதியின் குடும்பத்திற்கு பூர்வீக வகையில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும் மேற்படி பூமியில் 3ம் பிரதிவாதியின் முன்னோர்கள் கிணர் வெட்டியும், மின் இணைப்பு பெற்றும், ஆழ்துளை கிணர் அமைத்தும் அனுபவித்து வந்தார்கள் என்றும் 3ம் பிரதிவாதி 1, 2 பிரதிவாதிகளிடம் கடந்த 30.07.2010ம் தேதியில் தனது குடும்பத்துக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் அனைத்தையும் ஒரு பதிவு செய்யப்பட்ட பாக பாத்திய விடுதலை ஆவணம் மூலம் விடுதலை பெற்று அனுபவித்து வருகிறார் என்றும் வாதிகள் தாவா சொத்தில் அனுபவத்தில் இருந்திருந்தால் மேற்படி ஆவண விவரம் அப்பொழுதே வாதிகளுக்கு தெரிந்திருக்கும் என்றும் தாவா சொத்தில் எந்த வீடும் நிலையில் இல்லை என்றும் தாவா சொத்தானது

பு.ஹெக்.4.22.00 இதற்கு பு.ஏ.10.42 விஸ்தீரணம் கொண்டது என்றும் மேற்படி வீதம் தான் 3ம் பிரதிவாதியின் பாகபாத்திய விடுதலை ஆவணத்தில் கண்டுள்ளது என்றும் ஆனால் வாதிகள் தாவா சொத்தில் 3ம் பிரதிவாதிக்கு எந்த தகவலும் தெரிவிக்காமல் 3ம் பிரதிவாதிக்கு வெறும் பு.ஏ.0.08 விஸ்தீரணம் மட்டும் பாத்தியம் போலும், மீதமுள்ள பு.ஏ.10.34 விஸ்தீரண பூமி முழுவதும் வாதிகளுக்கு பாத்தியப்பட்டது போல் அரசு வருவாய்துறை ஆவணங்களை மோசடி செய்து ஏற்படுத்திக்கொண்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் தாவா சொத்துக்கள் கடந்த 12 வருடங்களாக ஆவணங்களின் படியும் 3ம் பிரதிவாதியின் அனுபவத்திலும், அதற்கு முன்பு பிரதிவாதிகளின் முன்னோர்கள் அனுபவத்திலும் இருந்து வருகிறது என்றும் தாவா சொத்தில் வாதிகளுக்கு எந்தவித அனுபவமும் பாத்தியமும் இல்லாத நிலையில் வாதிகள் 3ம் பிரதிவாதியின் ஆவணங்களை பொறுத்தும், தாவா சொத்தை பொறுத்தும் எந்தவித பரிகாரமும் கேட்க உரிமையும் தகுதியும் அற்றவர்கள் என்றும் எனவே வாதிகளின் வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

**9. எழுவினாக்கள் 1 மற்றும் 2க்கான தீர்வு :-**

| | |
|---|---|
| **எழுவினா – 1** | தாவா சொத்துக்கள் வாதிகளுக்கு பாத்தியப்பட்டு வாதிகளின் தனிப்பட்ட உரிமை மற்றும் அனுபவத்தின் கீழ் உள்ளது என்பது சரியா? |
| **எழுவினா – 2** | வாதிகள் தாவாவில் கோரியபடி 30.07.2010 தேதியிட்ட காங்கயம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.10015/2010 ஆவணம் தாவா சொத்தை கட்டுப்படுத்தாது என்ற விளம்புகை பரிகாரம் கிடைக்கத்தக்கதா? |

10. வாதிகள் தரப்பில் தாவா சொத்துக்கள் சின்னா போயன் மகன் சேமலை போயன் என்பவருக்கு காங்கயம் சார்பதிவக ஆவண எண்.878/1958 கிரைய

ஆவணத்தின்படி பாத்தியப்பட்டு அனுபவித்து வந்து எவ்விதமான ஆவணமும் ஏற்படுத்தி வைக்காமல் கடந்த 09.07.1993ம் தேதியில் காலமாகிவிட்டதற்கு பின்பு தாவா சொத்துக்களை மேற்படி சேமலை போயரின் வாரிசுகளான வாதிகள் பொதுவில் அனுபவித்து வருவாய்துறை ஆவணமான பட்டாவில் பெயர் மாற்றம் செய்தும் அரசுக்கு செலுத்த வேண்டிய வரி முதலானவைகள் பொதுவில் செலுத்தி அனுபவித்து வருகிறார்கள் என்றும் 1 முதல் 4 வாதிகளின் மூதாதையர் சேமலைபோயன் மகன் ஆறுமுகம் என்பவர் பெற்ற கடனுக்காக தாவா சொத்தின் பேரில் இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.324/2005 என்ற வழக்கு தாக்கல் செய்து, அதில் ஜப்தி செய்யப்பட்டுள்ளதை அறிந்து 1 முதல் 4 வாதிகள் அதனை ரத்து செய்ய மனு தாக்கல் செய்து கடந்த 17.02.2021ம் தேதியில் ரத்து உத்தரவு பெற்று நீதிமன்றம் மூலம் ஜப்தி நீக்கரவும் செய்துள்ளார்கள் என்றும் தாவா சொத்துக்கு சம்மந்தமில்லாத 1, 2 பிரதிவாதிகள் தங்களுக்குள்ள பாத்தியத்தை 3ம் பிரதிவாதிக்கு கடந்த 30.07.2010ம் தேதியில் ஒரு பாகபாத்திய விடுதலை பத்திரம் மோசடியாக ஏற்படுத்திக் கொடுத்து 1ம் பிரதிவாதி தாவா சொத்தைப் பொறுத்து அடமான ஆவணத்தை மோசடியாக ஏற்படுத்தியுள்ளார் என்றும் மேற்படி ஆவணங்களை ரத்து செய்து கொடுக்க வாதிகள் கடந்த 28.06.2021ம் தேதி கேட்டதில் பிரதிவாதிகள் ஒத்து வரவில்லை என்றும் தாவா சொத்தின் பேரில் 3, 4 எதிர்மனுதாரர்கள் ஏற்படுத்தியுள்ள 20.06.2018ம் தேதிய அடமான ஆவணத்தை கடந்த 03.02.2023ம் தேதியில் 3, 4 பிரதிவாதிகள் ரத்து செய்துவிட்டார்கள் என்றும் எனவே கடந்த 30.07.2010 தேதியிட்ட பாகபாத்திய விடுதலை ஆவணம் தாவா சொத்தைப் பொறுத்து கட்டுப்படுத்தக்கூடியதல்ல என்று விளம்புகை பரிகாரத்திற்காக இவ்வழக்கை தாக்கல் செய்ய வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது என்றும் சொல்லப்பட்டு வாதிகள் தரப்பு சங்கதிகளை நிரூபணம் செய்யும் வகையில் 12ம் வாதி வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு

வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.37 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

11. 2, 3 பிரதிவாதிகள் தரப்பில் தாவா சொத்துக்கள் 3ம் பிரதிவாதியின் குடும்பத்திற்கு பூர்வீக வகையில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும் மேற்படி பூமியில் 3ம் பிரதிவாதியின் முன்னோர்கள் கிணர் வெட்டியும், மின் இணைப்பு பெற்றும், ஆழ்துளை கிணர் அமைத்தும் அனுபவித்து வந்தார்கள் என்றும் 3ம் பிரதிவாதி 1, 2 பிரதிவாதிகளிடமிருந்து கடந்த 30.07.2010ம் தேதியில் தனது குடும்பத்துக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் அனைத்தையும் ஒரு பதிவு செய்யப்பட்ட பாக பாத்திய விடுதலை ஆவணம் மூலம் விடுதலை பெற்று அனுபவ சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றும் வாதிகள் தாவா சொத்தில் அனுபவத்தில் இருந்திருந்தால் மேற்படி ஆவண விவரம் அப்பொழுதே வாதிகளுக்கு தெரிந்திருக்கும் என்றும் தாவா சொத்தில் எந்த வீடும் நிலையில் இல்லை என்றும் தாவா சொத்தானது பு.ஹெக்.4.22.00 இதற்கு பு.ஏ.10.42 விஸ்தீரணம் கொண்டது என்றும் மேற்படி வீதம் தான் 3ம் பிரதிவாதியின் பாகபாத்திய விடுதலை ஆவணத்தில் கண்டுள்ளது என்றும் வாதிகள் தாவா சொத்தில் 3ம் பிரதிவாதிக்கு வெறும் பு.ஏ.0.08 விஸ்தீரணம் மட்டும் பாத்தியம் போலும், மீதமுள்ள பு.ஏ.10.34 விஸ்தீரண பூமி முழுவதும் வாதிகளுக்கு பாத்தியப்பட்டது போல் அரசு வருவாய்துறை ஆவணங்களை மோசடி செய்து ஏற்படுத்திக்கொண்டு இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றும் தாவா சொத்துக்கள் கடந்த 12 வருடங்களாக வாதிகளுக்கு தெரிந்தும், ஆவணங்களின் படியும் 3ம் பிரதிவாதியின் அனுபவத்திலும், அதற்கு முன்பு பிரதிவாதிகளின் முன்னோர்கள் அனுபவத்திலும் இருந்து வருகிறது என்றும் தாவா சொத்தில் வாதிகளுக்கு எந்தவித அனுபவமும் பாத்தியமும் இல்லாத நிலையில் வாதிகள்

இந்த பிரதிவாதியின் ஆவணங்களை பொறுத்தும், தாவா சொத்தை பொறுத்தும் எந்தவித பரிகாரமும் கேட்க உரிமையும் தகுதியும் அற்றவர்கள் என்றும் எனவே வாதிகளின் வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்றும் சொல்லப்பட்டு 2, 3 பிரதிவாதிகள் தரப்பு சங்கதிகளை நிரூபணம் செய்யும் வகையில் 3ம் பிரதிவாதி பி.வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு பி.வா.சா.ஆ.1 முதல் பி.வா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

12. வாதிகள் தரப்பில் தாவா சொத்துக்கள் வாதிகளின் முன்னோரான சேமலைபோயன் என்பவருக்கு பாத்தியப்பட்டு வாரிசு முறையில் வாதிகளால் அனுபவம் செய்து வரப்படும் சொத்துக்கள் என்று வாதிகள் தரப்பில் சொல்லப்பட்டுள்ள சங்கதிகளைப் பொறுத்து இந்நீதிமன்றம் பரிசீலிக்கும்போது வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.1 ஆவணமான 12.05.1958 தேதியிட்ட சேமலைபோயன் என்பவருக்கு குழந்தைசாமி கவுண்டர் மற்றும் மேற்படியார் அவரது மைனர் மகன் பாலுச்சாமிக்கு கார்டியனாக இருந்து ஏற்படுத்திக் கொடுத்த கிரைய ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.1 ஆவணத்தை பரிசீலிக்கும்போது சின்னாபோயன் மகன் சேமலைபோயன் என்பவர் க.ச.974 நெ. பு.ஏ.15.20 இதில் கிழமேல் இட்டேரிக்கு வடக்கு, தென்வடல் இட்டேரிக்கு கிழக்கு, காளியம்மாள் பங்குக்கு தெற்கு, வெள்ளியங்காட்டுக்கு மேற்கு இதன் மத்தியில் பு.ஏ.10.45 இந்த தீர்வையுள்ள பூமி மற்றும் மாவடை மரவடைகள் மாமூல் தடம் சகிதம் கிரையம் பெற்றுள்ளார் என்பதை அறிய முடிகிறது.

13. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.2 ஆவணமான 17.02.2021 தேதியிட்ட இந்நீதிமன்றத்தின் அ.வ.எண்.324/2005 மற்றும் இ.ம.எண்.1676/2005, இ.ம.எண்.34/2021 ஜப்தி நீக்கறவு உத்தரவை

பரிசீலிக்கும்போது தாவா சொத்துக்களில் பொதுவில் 4ல் 1 பங்கு பூமியைப் பொறுத்து 1 முதல் 4 வாதிகளின் மனுவின் பேரில் இந்நீதிமன்றத்தால் மேற்படி வழக்கில் ஜப்தி நீக்கம் செய்து உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.4 ஆவணங்களான ரீ.ச.எண்.908/2A ஹெக்டேர்.4.18.80 பூமிக்கான கணினி சிட்டா மற்றும் அ பதிவேடு ஆகியவற்றை பரிசீலிக்கும்போது தாவா சொத்துக்களைப் பொறுத்து மேற்படி ஆவணங்கள் 1 முதல் 19 வாதிகள் பெயரில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

14. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.5 ஆவணமான ரீ.ச.எண்.908/2B பு.ஹெக். 0.01.78 பூமிக்கான நத்தம் நிலவரித்திட்ட தூய சிட்டாவை பரிசீலிக்கும்போது சின்னபோயன் மகன் சேமலைபோயன் என்பவர் பெயரில் மேற்படி ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.6 ஆவணமான பழைய புல எண்.902/2, ரீ.ச.எண்.908/2B பு.ஹெக். 0.03.20 பூமிக்கான நத்தம் நிலவரித்திட்ட தூய சிட்டாவை பரிசீலிக்கும்போது சின்னபோயன் மகன் சேமலைபோயன் என்பவர் பெயரில் மேற்படி ஆவணம் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

15. வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.7 ஆவணமாக தாக்கல் செய்யப்பட்டுள்ள 12.01.2021 தேதியிட்ட காங்கயம் மண்டல துணை வட்டாட்சியர் அவர்களின் பட்டா மாறுதல் உத்தரவை பரிசீலிக்கும்போது பழைய பட்டா எண்.86 ரீ.ச.எண்.908/2பி பு.ஹெக்.0.03.20 பூமியை பொறுத்து சின்னபோயன் மகன் சேமலை போயன் என்பவர் பெயரிலிருந்து 1 முதல் 19 வாதிகள் பெயருக்கு மேற்படி பூமியைப் பொறுத்து பட்டா மாறுதல் செய்து கடந்த 12.01.2021 தேதியில் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. மேற்படி வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 ஆவணங்களின் பரிசீலனையில் இருந்து தாவா

சொத்துக்களை வா.சா.ஆ.1 ஆவணத்தின் அடிப்படையில் ஒரு சேமலை போயன் என்பவர் கிரையம் பெற்றுள்ளார் என்பதும் தாவா சொத்துக்களைப் பொறுத்த சிட்டா உள்ளிட்ட வருவாய்த்துறை ஆவணங்கள் தற்போது 1 முதல் 19 வாதிகள் பெயரில் உள்ளது என்பதும் தெளிவாகிறது.

16. வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.31 ஆவணமாக சேமலைபோயர் என்பவரின் இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தை பரிசீலிக்கும்போது மேற்படி சேமலைபோயர் என்பவர் கடந்த 09.07.1993 தேதியில் இறந்துவிட்டார் என்பதை அறிய முடிகிறது. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.8 மற்றும் வா.சா.ஆ.9 ஆவணங்களை பரிசீலிக்கும்போது கடந்த 20.08.2007 தேதியில் இறந்துவிட்ட ஆறுமுகம் மகன் சுப்பிரமணியம் என்பவருக்கு ஆறுமுகம் மற்றும் 1 முதல் 4 வாதிகள் தான் வாரிசுகள் என்று குறிப்பிட்டு மேற்படி வாரிசு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.10 மற்றும் வா.சா.ஆ.11 ஆவணங்களை பரிசீலிக்கும்போது கடந்த 22.07.2019 தேதியில் இறந்துவிட்ட சேமலை மகன் ஆறுமுகம் என்பவருக்கு 1 முதல் 4 வாதிகள் தான் வாரிசுகள் என்று குறிப்பிட்டு மேற்படி வாரிசு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

17. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.12 ஆவணமான ராமசாமி என்பவரின் இறப்பு சான்றிதழை பரிசீலிக்கும்போது மேற்படி கோவிந்தபோயன் மகன் ராமசாமி என்பவர் கடந்த 03.10.1997 தேதியில் இறந்துவிட்டார் என்பது தெரிய வருகிறது. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.13 மற்றும் வா.சா.ஆ.14 ஆவணங்களை பரிசீலிக்கும்போது கடந்த 24.08.2016 தேதியில் இறந்துவிட்ட ராமசாமி மகன் ஈஸ்வரன் என்பவருக்கு 5 மற்றும் 6 வாதிகள் தான் வாரிசுகள் என்று குறிப்பிட்டு

மேற்படி வாரிசு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.15 மற்றும் வா.சா.ஆ.16 ஆவணங்களை பரிசீலிக்கும்போது கடந்த 11.10.2005 தேதியில் இறந்துவிட்ட ராமசாமி மனைவி நாச்சியம்மாள் என்பவருக்கு 7 ம் வாதி தான் வாரிசு என்று குறிப்பிட்டு மேற்படி வாரிசு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

18. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.17 மற்றும் வா.சா.ஆ.18 ஆவணங்களை பரிசீலிக்கும்போது கடந்த 23.03.2002 தேதியில் இறந்துவிட்ட பழனிச்சாமிபோயன் என்பவருக்கு பழனியம்மாள், ராமசாமி மற்றும் 12 மற்றும் 13 வாதிகள் தான் வாரிசுகள் என்று குறிப்பிட்டு மேற்படி வாரிசு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.19 ஆவணத்தை பரிசீலிக்கும்போது பழனிச்சாமி மனைவி பழனியம்மாள் என்பவர் கடந்த 23.11.2009 தேதியில் இறந்துவிட்டார் என்பது தெரிய வருகிறது. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.20 மற்றும் வா.சா.ஆ.21 ஆவணங்களை பரிசீலிக்கும்போது கடந்த 17.12.2018 தேதியில் இறந்துவிட்ட பழனிச்சாமி மகன் ராமசாமி என்பவருக்கு 9 முதல் 11 வாதிகள் தான் வாரிசுகள் என்று குறிப்பிட்டு மேற்படி வாரிசு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

19. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.22 மற்றும் வா.சா.ஆ.23 ஆவணங்களை பரிசீலிக்கும்போது கடந்த 23.01.1996 தேதியில் இறந்துவிட்ட சேமலை மகன் குப்புசாமி என்பவருக்கு 14 முதல் 17 வாதிகள் தான் வாரிசுகள் என்று குறிப்பிட்டு மேற்படி வாரிசு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது. வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.32 மற்றும் வா.சா.ஆ.33 ஆவணங்களாக 24.09.2012 தேதியிட்ட இந்நீதிமன்றத்தின்

அ.வ.எண்.226/2012 வழக்கின் தீர்ப்புரை மற்றும் தீர்ப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணங்களை பரிசீலிக்கும்போது இறந்துபோன சேமலைபோயர் என்பவருக்கு வாதிகள் தான் வாரிசுகள் என்று விளம்புகை செய்யக்கோரி மேற்படி வழக்கானது தாக்கல் செய்யப்பட்டு மேற்படி வழக்கில் கடந்த 09.07.1993ம் தேதியில் இறந்துபோன சேமலைபோயர் என்பவருக்கு இவ்வழக்கின் 7, 8, 12, 15 முதல் 19 வாதிகளும் ஒரு ஆறுமுகம், ஈஸ்வரன், ராமசாமி, செல்வி ஆகியோர்கள் தான் சட்டப்படியான வாரிசுகள் என்று விளம்புகை செய்து உத்தரவிடப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது.

20. வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.35 ஆவணமாக 12ம் வாதி பெயரிலான மின் கட்டண ரசீதுகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.37 ஆவணமாக புல எண்.908க்கான புல வரைபடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.23 மற்றும் வா.சா.ஆ.32, வா.சா.ஆ.33 வரையிலான ஆவணங்களின் பரிசீலனையில் இருந்து தாவா சொத்துக்களை ஒரு சின்னாபோயன் மகன் சேமலைபோயன் என்பவர் கிரையம் பெற்றுள்ளார் என்பதும் மேற்படி சின்னாபோயன் மகன் சேமலைபோயன் என்பவருக்கு 1 முதல் 19 வாதிகள் தான் தற்போது வாரிசுகள் என்பதும் சின்னாபோயன் மகன் சேமலைபோயன் என்பவரின் வாரிசுகள் என்ற அடிப்படையில் வாதிகள் தாவா சொத்தை அனுபவம் செய்து வருவதன் அடிப்படையில் தாவா சொத்தைப் பொறுத்த வருவாய்த்துறை ஆவணங்கள் வாதிகள் பெயரில் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதும் தெரிய வருகிறது.

21. பிரதிவாதிகள் தரப்பில் தாவா சொத்துக்கள் 3ம் பிரதிவாதியின் குடும்பத்திற்கு பூர்வீக வகையில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும் தாவா பூமியில் 3ம் பிரதிவாதியின் முன்னோர்கள் கிணர் வெட்டியும், மின் இணைப்பு

பெற்றும், ஆழ்துளை கிணர் அமைத்தும் அனுபவித்து வந்தார்கள் என்றும் அதைப் பொறுத்து 3ம் பிரதிவாதி பாக பாத்திய விடுதலை ஆவணம் பெற்று தனித்து பாத்தியமடைந்து அனுபவ சுவாதீனத்தில் இருந்து வருகிறார் என்றும் தாவா சொத்தில் எந்த வீடும் நிலையில் இல்லை என்றும் தாவா சொத்துக்கள் கடந்த 12 வருடங்களாக வாதிகளுக்கு தெரிந்தும், ஆவணங்களின் படியும் 3ம் பிரதிவாதியின் அனுபவத்திலும், அதற்கு முன்பு பிரதிவாதிகளின் முன்னோர்கள் அனுபவத்திலும் இருந்து வருகிறது. மேற்படி சொத்தில் வாதிகளுக்கு எவ்வித பாத்தியமும் அனுபவமும் உரிமையும் கிடையாது என்றும் சொல்லப்பட்டுள்ளது.

22. மேற்படி சங்கதிகளைப் பொறுத்து இந்நீதிமன்றம் பரிசீலிக்கும்போது வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.24 மற்றும் வா.சா.ஆ.36 ஆவணமாக 15.11.1958 தேதியிட்ட கிரைய ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தை பரிசீலிக்கும்போது முத்துச்சாமி கவுண்டர் என்பவர் க.ச.974 நெ. பு.ஏ.15.20 பூமியில் வடபுறம் ராமசாமிக்கவுண்டர் பூமிக்கு தெற்கு, முத்துச்சாமி கவுண்டர் பூமிக்கு மேற்கு, **சேமலை நாயக்கன் பூமிக்கு வடக்கு,** தென்வடல் இட்டேரிக்கு கிழக்கு என செக்குபந்தி கண்டு பு.ஏ.4.75 பூமியை கிரையம் பெற்றுள்ளார். மேற்படி ஆவணத்தின் பரிசீலனையில் இருந்து 3ம் பிரதிவாதியின் தகப்பனாரான முத்துச்சாமி கவுண்டர் என்பவர் தாவா சொத்தான க.ச.எண்.974 பூமியில் **சேமலை நாயக்கன் பூமிக்கு வடக்கு** என செக்குபந்தி கண்டு பு.ஏ.4.75 பூமியை மட்டுமே கிரையம் பெற்றுள்ளார் என்பது தெரிய வருகிறது.

23. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.25 ஆவணமான 10.02.1999 தேதியிட்ட அடமான ஆவணத்தை பரிசீலிக்கும்போது முத்துச்சாமி

கவுண்டர் மற்றும் 3ம் பிரதிவாதி குமாரசாமி ஆகியோர்கள் க.ச.908/1 பு.ஹெக்.2.10.0 பூமிகள் மற்றும் க.ச.974 பு.ஏ.15.20ல் பு.ஏ.4.75 பூமிகளை காங்கயம் கூட்டுறவு நிலவள வங்கியில் அடமானம் வைத்துள்ளார்கள் என்பதை அறிய முடிகிறது. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.26 ஆவணமான 10.02.1999 தேதியிட்ட அடமான ஆவணத்தை பரிசீலிக்கும்போது முத்துச்சாமி கவுண்டர் மற்றும் 3ம் பிரதிவாதி குமாரசாமி ஆகியோர்கள் க.ச.908/1 பு.ஹெக்.2.10.0 க.ச.974 பு.ஏ.15.20ல் பு.ஏ.4.75 பூமிகளை காங்கயம் கூட்டுறவு நிலவள வங்கியில் அடமானம் வைத்துள்ளார்கள் என்பது தெரிய வருகிறது.

24. மேற்படி வா.சா.ஆ.24 முதல் வா.சா.ஆ.26 வரையிலான ஆவணங்களின் பரிசீலனையில் இருந்து தாவா க.ச.எண்.974 பு.ஏ.15.20 பூமியில் 3ம் பிரதிவாதியின் தகப்பனார் முத்துச்சாமி கவுண்டர் பு.ஏ.4.75 பூமிகளை மட்டுமே கிரையம் பெற்றுள்ளார் என்பதும் மேற்படி கிரையம் பெற்ற பு.ஏ.4.75 பூமிகளை பொறுத்து மட்டுமே வா.சா.ஆ.25 மற்றும் வா.சா.ஆ.26 அடமான ஆவணங்கள் மேற்படியார்களால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது என்பதும் தெரிய வருகிறது. ஆனால் பிரதிவாதிகள் தரப்பில் தாவா சொத்தான க.ச.எண்.974 பு.ஏ.10.42 பூமிகள் முழுவதும் பிரதிவாதிகளுக்கு பூர்வீக வழியில் பாத்தியப்பட்டு மேற்படி பூமிகளை பிரதிவாதிகள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்று பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வாதம் செய்யப்பட்டுள்ள நிலையில் மேற்படி சங்கதிகளை நிரூபணம் செய்யும் பொறுப்பு பிரதிவாதிகள் வசமே உள்ளது.

25. பி.வா.சா.1 தனது குறுக்கு விசாரணையில் <u>908/1 பு.ஏ.5.19 பூமிக்கு எனது தகப்பனார் முத்துசாமி பெயரில் இருந்து தற்போது எனது பெயருக்கு பட்டா உள்ளது என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. 908/2பி மற்றும் 908/2ஏ</u>

**<u>ஆகிய காலைகளுக்கு வாதிகளின் முன் பாத்தியஸ்தர்களான சேமலை போயன் என்பவர் பெயரிலிருந்து தற்சமயம் மேற்படியாரின் வாரிசுகள் என்ற அடிப்படையில் வாதிகளின் பெயர்களுக்கு பட்டா ஏற்பட்டுள்ள விபரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி உட்பிரிவு விபரம் பட்டா வழங்கப்பட்ட விபரம் குறித்து வாதிகள் தங்கள் தரப்பில் ஆவணங்களை தாக்கல் செய்துள்ளதை பார்த்து தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. நான் எதிர்வழக்குரையில் குறிப்பிட்டவாறு 908 காலை முழுவதும் எனக்கு பாத்தியப்பட்டு உள்ளது என்பதை காண்பிக்க கூடிய வகையில் நான் எந்த ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல</u>** என்று சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் பிரதிவாதிகள் தரப்பில் தாவா சொத்துக்களைப் பொறுத்த பிரதிவாதிகள் பெயரிலான உரிமை ஆவணங்களோ வருவாய்த்துறை ஆவணங்களோ பிற ஆவணங்களோ சாட்சியங்களோ எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

26. வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.27 ஆவணமாகவும், பி.வா.சா.ஆ.1 ஆவணமாகவும் தாக்கல் செய்யப்பட்டுள்ள 30.07.2010 தேதியிட்ட 3ம் பிரதிவாதிக்கு 1, 2 பிரதிவாதிகள் ஏற்படுத்திக் கொடுத்த பாகபாத்திய விடுதலை ஆவணத்தை பரிசீலிக்கும்போது ரீசர்வே எண்.908/2 நெ. பு.ஹெக்.4.22.00 இதற்கு பு.ஏ.10.42 (இதற்கு காங்கயம் கிராமம் பழைய க.ச.974) (பட்டா எண்.344) பூமியைப் பொறுத்தும் இதர பூமிகளைப் பொறுத்தும் மேற்படி பாகபாத்திய விடுதலை ஆவணம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

27. வழக்காவணங்கள் மற்றும் இரு தரப்பு சாட்சியங்களின் பரிசீலனையில் இருந்து 3ம் பிரதிவாதியின் தகப்பனாரான முத்துச்சாமி கவுண்டர் என்பவர் தாவா சொத்தான க.ச.974 நெ. பு.ஏ.15.20 பூமியில் செக்குபந்தி கண்டு பு.ஏ.4.75 பூமியை மட்டுமே கிரையம் பெற்று மேற்படி கிரைய சொத்தான பு.ஏ.4.75 பூமியை

பொறுத்தே 3ம் பிரதிவாதி மற்றும் முத்துச்சாமி கவுண்டரால் வா.சா.ஆ.25 மற்றும் வா.சா.ஆ.26 அடமான ஆவணங்கள் வங்கிக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ள நிலையில் தாவா சொத்தான க.ச.எண்.974 ரீ.ச.எண்.908/2 பூமியில் பு.ஏ.10.42 பூமிகளைப் பொறுத்து வா.சா.ஆ.27 பாகபாத்திய விடுதலை ஆவணம் 3ம் பிரதிவாதிக்கு 1, 2 பிரதிவாதிகளால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது.

28. இந்நிலையில் தாவா சொத்தான க.ச.974 நெ. ரீ.ச.எண்.908/2ல் பு.ஏ.15.20 பூமிகளில் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கு பு.ஏ.10.42 பூமிகள் முழுவதும் பூர்வீகமாக பாத்தியப்பட்ட பூமிகள் என்றும் மேற்படி பூமிகள் முழுவதையும் பிரதிவாதிகள் அனுபவம் செய்து வந்து அதன் அடிப்படையில் பி.வா.சா.ஆ.1 பாகபாத்திய விடுதலை ஆவணம் 3ம் பிரதிவாதிக்கு 1, 2 பிரதிவாதிகளால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டு தாவா சொத்துக்கள் முழுவதையும் 3ம் பிரதிவாதி அனுபவம் செய்து வருகிறார் என்றும் பிரதிவாதிகள் தரப்பில் சொல்லப்பட்டுள்ள நிலையில் மேற்படி சங்கதிகளை நிரூபணம் செய்யும் பொறுப்பு பிரதிவாதிகள் வசமே உள்ள நிலையில் மேற்படி சங்கதிகளை நிரூபணம் செய்யும் வகையில் பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித ஆவணங்களும் சாட்சியங்களும் முன்னிடப்படவில்லை.

29. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.28 மற்றும் பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.வா.சா.ஆ.2 மற்றும் பி.வா.சா.ஆ.3 ஆவணங்களான 26.06.2018 மற்றும் 23.03.2021 தேதியிட்ட 3ம் பிரதிவாதி வங்கிக்கு ஏற்படுத்திக் கொடுத்த அடமானக் கடன் ஆவணங்களை பரிசீலிக்கும்போது அதில் தாவா சொத்தான ரீ.ச.எண்.908/2, 908/2பி நெ. பு.ஹெக்.4.22.00ல் பு.ஏ.10.42 பூமிகள் (பழைய க.ச.எண்.974) பட்டா எண்.344

ஆகிய பூமிகளைப் பொறுத்து மேற்படி அடமான ஆவணம் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது.

30. பிரதிவாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.வா.சா.ஆ.4 மற்றும் பி.வா.சா.ஆ.5 ஆவணங்களை பரிசீலிக்கும்போது பி.வா.சா.ஆ.2 மற்றும் பி.வா.சா.ஆ.3 ஆவணங்களான அடமான ஆவணங்கள் 3ம் பிரதிவாதி கடனை திருப்பி செலுத்தியதன் அடிப்படையில் ரத்து செய்யப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது. வாதிகள் தரப்பில் 1ம் பிரதிவாதியால் வங்கிக்கு தாவா சொத்துக்களைப் பொறுத்து ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட மேற்படி பி.வா.சா.ஆ.4 மற்றும் பி.வா.சா.ஆ.5 அடமானக் கடன் ஆவணங்கள் ரத்து செய்யப்பட்டவிட்டது என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியாக உள்ளது. வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.29 மற்றும் வா.சா.ஆ.30 ஆவணங்களாக ரீ.ச.எண்.908/1 பூமிக்கான 3ம் பிரதிவாதி பெயரிலான கணினி சிட்டா மற்றும் அ பதிவேடு ஆகியவை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

31. பி.வா.சா.2 தனது குறுக்கு விசாரணையில் **<u>தாவா சொத்துக்கள் ஆதியில் யார் வசம் இருந்தது என்றால் குமாரசாமியும் முத்துசாமியும் தான் ஓட்டி வருகிறார்கள். அதற்கு முன் யாருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்பது எனக்கு தெரியாது. முத்துச்சாமிக்கு சொத்துக்கள் கிரைய வகையில் பாத்தியமா அல்லது பூர்வீக வகையில் பாத்தியமா என்றால் அது சம்பந்தமாக எனக்கு தெரியாது</u>** என்று சாட்சியம் அளித்துள்ளார். தாவா சொத்துக்களை பிரதிவாதிகள் தொடர்ச்சியாக வாதிகளுக்கு தெரிய அனுபவம் செய்து வருவதாக பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வாதம் செய்துள்ள நிலையில் மேற்படி சங்கதிகளை நிரூபணம் செய்யும் வகையில் தாவா சொத்துக்கள் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டு பிரதிவாதிகளின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்பதை நிரூபணம் செய்யும்

வகையில் பிரதிவாதிகள் தரப்பில் எவ்வித உரிமை ஆவணங்களும் வருவாய்த்துறை ஆவணங்களும் பிற ஆவணங்களும் சாட்சியங்களும் முன்னிடப்படவில்லை.

32. எனவே மேலேகண்ட பரிசீலனைகளில் இருந்தும் மற்றும் உபயவாதிகள் தரப்பு சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் ஆகியவற்றின் பரிசீலனையில் இருந்தும் தாவா சொத்துக்கள் ஒரு சேமலைபோயன் என்பவரால் கிரையம் பெறப்பட்டு மேற்படியாரால் அனுபவம் செய்து வரப்பட்டு பின்னிட்டு தாவா சொத்துக்கள் மேற்படி சேமலைபோயன் என்பவரின் தற்போதைய வாரிசுகளான வாதிகளால் வாரிசுகள் என்ற முறையில் அடைந்து அனுபவம் செய்து வரப்படுகிறது என்ற சங்கதியானது வாதிகள் தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் போதுமான வரையில் நிரூபணம் செய்யப்பட்டுள்ள நிலையில் தாவா சொத்துக்கள் பிரதிவாதிகளுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும் தாவா சொத்துக்களை பிரதிவாதிகள் தங்கள் சுவாதீனத்தில் வைத்து தொடர்ச்சியாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும் பிரதிவாதிகள் தரப்பில் முன்வைக்கப்பட்ட எதிர்வாதங்கள் பிரதிவாதிகள் தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்படவில்லை.

33. எனவே மேலேகண்ட விவாதங்களின் அடிப்படையில் தாவா சொத்துக்கள் ஒரு சேமலைபோயன் என்பவரால் கிரையம் பெறப்பட்டு மேற்படியாரால் அனுபவம் செய்து வரப்பட்டு பின்னிட்டு தாவா சொத்துக்கள் மேற்படியாரின் தற்போதைய வாரிசுகளான வாதிகளால் வாரிசுகள் என்ற முறையில் அடைந்து அனுபவம் செய்து வரப்படுகிறது என்பது வாதிகள் தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் போதுமான வரையில்

நிரூபணம் செய்யப்பட்டுள்ளதால் 3ம் பிரதிவாதியின் தகப்பனாரான முத்துச்சாமி கவுண்டர் என்பவர் தாவா சொத்தான க.ச.974 நெ. பு.ஏ.15.20 பூமியில் செக்குபந்தி கண்டு பு.ஏ.4.75 பூமியை மட்டுமே கிரையம் பெற்றுள்ள நிலையில் 1, 2 பிரதிவாதிகளால் தாவா சொத்துக்களைப் பொறுத்து 3ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ள வா.சா.ஆ.27 மற்றும் பி.வா.சா.ஆ.1 ஆன பாகபாத்திய விடுதலை ஆவணமானது தாவா சொத்துக்களில் வாதிகளின் பாத்தியம் மற்றும் அனுபவத்தை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தக்கூடியது அல்ல என்றே இந்நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

34. எனவே மேலேகண்ட பரிசீலனைகள் மற்றும் விவாதங்களின் அடிப்படையிலும், வா.சா.1, வா.சா.2ன் சாட்சியம் மற்றும் பி.வா.சா.1, பி.வா.சா.2 ஆகியோர்களின் சாட்சியம் மற்றும் உபய தரப்பினர்களின் சான்றாவணங்களின் பரிசீலனைகளில் இருந்தும் தாவா சொத்துக்கள் ஒரு சேமலைபோயன் என்பவரால் கிரையம் பெறப்பட்டு மேற்படியாரால் அனுபவம் செய்து வரப்பட்டு பின்னிட்டு தாவா சொத்துக்கள் மேற்படி சேமலைபோயன் என்பவரின் தற்போதைய வாரிசுகளான வாதிகளால் மேற்படியாரின் வாரிசுகள் என்ற முறையில் அடைந்து அனுபவம் செய்து வரப்படுகிறது என்ற சங்கதியானது வாதிகள் தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் போதுமான வரையில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதாலும் தாவா சொத்துக்கள் பிரதிவாதிகளுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும் தாவா சொத்துக்களை பிரதிவாதிகள் தங்கள் சுவாதீனத்தில் வைத்து தொடர்ச்சியாக அனுபவம் செய்து வருகிறார்கள் என்றும் பிரதிவாதிகள் தரப்பில் முன்வைக்கப்பட்ட எதிர்வாதங்கள் பிரதிவாதிகள் தரப்பில் தகுந்த சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யப்படாததாலும் 3ம் பிரதிவாதியின் தகப்பனாரான முத்துச்சாமி கவுண்டர் என்பவர் தாவா சொத்தான

க.ச.974 நெ. பு.ஏ.15.20 பூமியில் செக்குபந்தி கண்டு பு.ஏ.4.75 பூமியை மட்டுமே கிரையம் பெற்றுள்ள நிலையில் தாவா சொத்துக்களைப் பொறுத்து 1, 2 பிரதிவாதிகளால் 3ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட வா.சா.ஆ.27 மற்றும் பி.வா.சா.ஆ.1 ஆன பாகபாத்திய விடுதலை ஆவணமானது தாவா சொத்துக்களில் வாதிகளின் பாத்தியம் மற்றும் அனுபவத்தை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தக்கூடியது அல்ல என்றே இந்நீதிமன்றம் தீர்மானித்து வாதிகள் தாவாவில் கோரியுள்ள விளம்புகை பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கது என்றே இந்நீதிமன்றம் தீர்மானித்து 1, 2 எழுவினாக்களுக்கு தீர்வு காண்கிறது.

**<u>35. எழுவினா எண்.4 க்கான தீர்வு :-</u>**

| | |
|---|---|
| **எழுவினா – 4** | வாதிகளுக்கு கிடைக்கக்கூடிய இதர பரிகாரங்கள் என்ன? |

36. எழுவினாக்கள் 1 மற்றும் 2 க்கு தீர்வு கண்டுள்ளதன் அடிப்படையில், வாதிகளுக்கு மேற்கொண்டு கிடைக்கக்கூடிய பரிகாரங்கள் வேறு எதுவுமில்லை என்றும், இவ்வழக்கின் சங்கதி மற்றும் சூழ்நிலைகளை கருத்திற்கொண்டு வாதிகள் மற்றும் பிரதிவாதிகளுக்கு ஏற்பட்ட செலவு தொகைகளை அவரவர்களே பொறுத்துக்கொள்ள வேண்டும் என்று தீர்மானித்து இந்த எழுவினா 4 ற்கு இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

**முடிவாக**,

தாவா அனுமதிக்கப்பட்டு, தாவா சொத்துக்கள் வாதிகளுக்கு பாத்தியப்பட்டு அனுபவம் செய்து வருவதில் 1, 2 பிரதிவாதிகள் கடந்த 30.07.2010ம் தேதியில் காங்கயம் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.10015/2010ன்படி 3ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்திக் கொடுத்துள்ள பாகபாத்திய விடுதலை ஆவணம்

தாவா சொத்துக்களை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தக்கூடியதல்ல என்று விளம்புகை செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த தீர்ப்பானது என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர், இன்று 2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 09 ம் நாள் என்னால் அவையறிய பகரப்பட்டது.

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2026.03.09 19:54:07 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.

**வாதிகள் தரப்பு சாட்சிகள்:–**

வா.சா.1 கோவிந்தராஜ் (12 ம் வாதி)

வா.சா.2 இளங்கோ (மூன்றாம் தரப்பினர்)

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்:–**

பி.வா.சா.1 குமாரசாமி (3 ம் பிரதிவாதி)

பி.வா.சா.2 செல்வராஜ் (மூன்றாம் தரப்பினர்)

**வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்:–**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 12.05.1958 | தேதியிட்ட கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | 17.02.2021 | தேதியிட்ட இந்நீதிமன்றத்தின் இ.ம.எண்.34/2021ன் உத்தரவு சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.3 | 16.07.2021 | தேதியிட்ட பட்டா எண்.344 கணினி நகல் |
| வா.சா.ஆ.4 | 16.07.2021 | தேதியிட்ட அ பதிவேடு கணினி நகல் |
| வா.சா.ஆ.5 | 06.01.2020 | தேதியிட்ட புல எண்.908/2பி–க்கான தூய சிட்டா உண்மை நகல் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.6 | 06.01.2020 | தேதியிட்ட புல எண்.908/2பி–க்கான தூய அடங்கல் பதிவேடு உண்மை நகல் |
| வா.சா.ஆ.7 | 12.01.2021 | தேதியிட்ட பட்டா மாறுதல் உத்தரவு அசல் |
| வா.சா.ஆ.8 | 12.09.2007 | தேதியிட்ட சுப்பிரமணியம் என்பவரின் இறப்பு சான்றிதழ் உண்மை நகல் |
| வா.சா.ஆ.9 | 10.10.2007 | தேதியிட்ட சுப்பிரமணியம் என்பவரின் வாரிசு சான்றிதழ் உண்மை நகல் |
| வா.சா.ஆ.10 | 23.08.2024 | தேதியிட்ட ஆறுமுகம் என்பவரின் இறப்பு சான்றிதழ் உண்மை நகல் |
| வா.சா.ஆ.11 | 23.09.2019 | தேதியிட்ட ஆறுமுகம் என்பவரின் வாரிசு சான்றிதழ் உண்மை நகல் |
| வா.சா.ஆ.12 | 08.10.1997 | தேதியிட்ட ராமசாமி என்பவரின் இறப்பு சான்றிதழ் உண்மை நகல் |
| வா.சா.ஆ.13 | 07.09.2016 | தேதியிட்ட ஈஸ்வரன் என்பவரின் இறப்பு சான்றிதழ் உண்மை நகல் |
| வா.சா.ஆ.14 | 01.03.2018 | தேதியிட்ட ஈஸ்வரன் என்பவரின் வாரிசு சான்றிதழ் உண்மை நகல் |
| வா.சா.ஆ.15 | 12.09.2006 | தேதியிட்ட நாச்சியம்மாள் என்பவரின் இறப்பு சான்றிதழ் உண்மை நகல் |
| வா.சா.ஆ.16 | 27.07.2010 | தேதியிட்ட நாச்சியம்மாள் என்பவரின் வாரிசு சான்றிதழ் உண்மை நகல் |
| வா.சா.ஆ.17 | 09.10.2024 | தேதியிட்ட பழனிச்சாமிபோயன் என்பவரின் இறப்பு சான்றிதழ் உண்மை நகல் |
| வா.சா.ஆ.18 | 02.05.2002 | தேதியிட்ட பழனிச்சாமிபோயன் என்பவரின் வாரிசு சான்றிதழ் உண்மை நகல் |
| வா.சா.ஆ.19 | 03.12.2009 | தேதியிட்ட பழனியம்மாள் என்பவரின் இறப்பு சான்றிதழ் உண்மை நகல் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.20 | 29.08.2024 | தேதியிட்ட ராமசாமி என்பவரின் இறப்பு சான்றிதழ் உண்மை நகல் |
| வா.சா.ஆ.21 | 02.05.2019 | தேதியிட்ட ராமசாமி என்பவரின் வாரிசு சான்றிதழ் உண்மை நகல் |
| வா.சா.ஆ.22 | 17.10.2012 | தேதியிட்ட குப்புசாமி என்பவரின் இறப்பு சான்றிதழ் உண்மை நகல் |
| வா.சா.ஆ.23 | 14.12.2012 | தேதியிட்ட குப்புசாமி என்பவரின் வாரிசு சான்றிதழ் உண்மை நகல் |
| வா.சா.ஆ.24 | 15.11.1958 | தேதியிட்ட கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.25 | 10.02.1999 | தேதியிட்ட அடமான ஆவணம் சான்றிட்ட கணினி நகல் |
| வா.சா.ஆ.26 | 10.02.1999 | தேதியிட்ட அடமான ஆவணம் சான்றிட்ட கணினி நகல் |
| வா.சா.ஆ.27 | 30.07.2010 | தேதியிட்ட பாகபாத்திய விடுதலை ஆவணம் சான்றிட்ட கணினி நகல் |
| வா.சா.ஆ.28 | 26.06.2018 | தேதியிட்ட அடமான கடன் பத்திரம் சான்றிட்ட கணினி நகல் |
| வா.சா.ஆ.29 | 16.07.2021 | தேதியிட்ட பட்டா எண்.605 க்கான கணினி நகல் |
| வா.சா.ஆ.30 | 16.07.2021 | தேதியிட்ட புல எண்.908/1 க்கான அ பதிவேடு கணினி நகல் |
| வா.சா.ஆ.31 | 03.02.2012 | தேதியிட்ட சேமலைபோயர் என்பவரின் இறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.32 | 24.09.2012 | தேதியிட்ட இந்நீதிமன்றத்தின் அ.வ.எண்.226/2012 ன் தீர்ப்புரை சான்றிட்ட நகல் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.33 | 24.09.2012 | தேதியிட்ட இந்நீதிமன்றத்தின் அ.வ.எண்.226/2012 ன் தீர்ப்பாணை சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.34 | 20.11.2012 | தேதியிட்ட காங்கயம் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தின் CMP.No.6380/2012 உத்தரவு சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.35 | 04.10.2021 | தேதியிட்ட மின் கட்டண ரசீதுகள் அசல் (எண்ணிக்கை –2) |
| வா.சா.ஆ.36 | 15.11.1958 | தேதியிட்ட கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.37 | 08.10.2025 | தேதியிட்ட புல எண்.908 க்கான புல வரைபடம் கணினி நகல் |

<u>பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள்</u>:–

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 30.07.2010 | தேதியிட்ட பாகபாத்திய விடுதலை ஆவணம் சான்றிட்ட கணினி நகல் |
| பி.வா.சா.ஆ.2 | 26.06.2018 | தேதியிட்ட அடமானப் பத்திரம் அசல் |
| பி.வா.சா.ஆ.3 | 23.03.2021 | தேதியிட்ட அடமானப் பத்திரம் அசல் |
| பி.வா.சா.ஆ.4 | 03.02.2023 | தேதியிட்ட அடமான ரசீது அசல் |
| பி.வா.சா.ஆ.5 | 03.02.2023 | தேதியிட்ட அடமான ரசீது அசல் |

K S MALATHI
Digitally signed by K S MALATHI
Date: 2026.03.09 19:54:18 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
காங்கயம்.